# மக்கள் சாசனம்

# 2012–2013

# ஆதிதிராவிடர் நலத்துறை

## 1. கல்வி உதவித் தொகை / பராமரிப்புத் தொகை

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 1.1 | **10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post Matric) மைய அரசு கல்வி உதவித் தொகை திட்டம்.** பள்ளி மற்றும் கல்லூரிக்கு செலுத்த வேண்டிய திருப்பிச் அளிக்கப்படாத (Non refundable fees) அனைத்துக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புத் தொகை ஆகியவை கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.<br>**பராமரிப்பு படிகள்**<br>**1) விடுதியில் அல்லாதோர்** மாதம் ரூ.230/– முதல் ரூ.550/–வரை<br>**2) விடுதியில் உள்ளோர்.** மாதம் ரூ.380/– முதல் ரூ.1200/– வரை | ➢ 11ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர் மட்டும்.<br>➢ ஆதிதிராவிடர் /பழங்குடியினர் மாணவ/மாணவியர்களின் பெற்றோர் /பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும். (அனைத்து வகை வருமானமும் சேர்த்து கணக்கிடப்படும்). | பள்ளித் தலைமை ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.<br>பிற மாநிலங்களில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்கள் ஆணையரின் நேர்முக உதவியாளரை அணுக வேண்டும். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 1.2 | **சுகாதாரமற்ற தொழிலில் தூய்மைப்பணி புரிவோரின் குழந்தைகளுக்கு 10ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான (Pre-Matric) மைய அரசின் உதவித் தொகைத் திட்டம்**<br><br>**உதவித் தொகை: விடுதியில் அல்லாதோர்**<br>1 ஆம் வகுப்பு முதல். 10 ஆம் வகுப்பு வரை.<br>மாதம் ரூ.110/–<br><br>**விடுதியில் தங்கி பயில்பவர்கள்.**<br>3ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.700/–<br><br>**<u>சிறப்பு மானியம்</u>**<br>**விடுதியில் அல்லாதோர்**<br>ஆண்டுக்கு ரூ.750/–<br><br>**விடுதியில் உள்ளோர்**<br>ஆண்டுக்கு ரூ.1000/– | ➢ துப்புரவுத் தொழில் செய்வோரின் குழந்தைகள்.<br>➢ சாதி மத பேதம் இல்லை.<br>➢ ஆண்டு வருமான வரம்பு இல்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 1.3 | **உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை.**<br><br>பட்டப்படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.7500/– முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்ப பட்டப்படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.8000/– மானியமாக வழங்கப்படுகிறது. | ➢ ஆதிதிராவிடர் /பழங்குடியினர் /கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள்<br>➢ ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சம்<br>➢ அரசு விடுதி அல்லாமல் கல்லூரி விடுதிகளில் தங்கி பயில்பவர்கள் | கல்லூரி முதல்வர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். |
| 1.4 | **அயல்நாடு சென்று உயர் கல்விப் பயில உதவித்தொகை**<br><br>பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளில் இந்தியாவில் இல்லாத படிப்புகளில் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் SC/ST மாணவர்களை ஊக்குவித்தல் | ➢ பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ ஆதிதிராவிடர் /பழங்குடியினர் /கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள் | ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை–5. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 1.5 | **10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post-Matric) மாநில அரசின் சிறப்பு உதவித் தொகை திட்டம்**<br><br>**பராமரிப்பு படிகள்:**<br>**விடுதியில் அல்லாதோர்**<br>மாதம் ரூ.100/– முதல் ரூ.175/– வரை.<br><br>**விடுதியில் தங்கி பயில்பவர்கள்:**<br>மாதம் ரூ.175/– முதல்ரூ.350/– வரை. | ➢ ஆதிதிராவிடர் /பழங்குடியினர் /கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள்.<br>➢ பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / கல்லூரி முதல்வர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். |
| **2. கல்விக்கட்டணச் சலுகைகள்** | | | |
| 2.1 | **கற்பிப்புக் கட்டணச் சலுகை**<br>அரசு மற்றும் அரசு நிதி உதவிப் பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர் கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்படுகிறது. | ➢ வருமான வரம்பு ஏதும் நிர்ணயிக்கப் படவில்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / கல்லூரி முதல்வர்கள் / மாவட்ட ஆதி (ம) பந அலுவலர்கள். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 2.2 | **பட்டப்படிப்பு பயிலும் மாணவ / மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்**<br><br>பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. | ➢ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/ மாணவியர்கள்<br>➢ பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் மைய அரசு நிர்ணயித்துள்ள வருமான வரம்பிற்கு மேற்பட்டிருந்தாலும் அம்மாணவர்களுக்கும் வழங்கப்படும். | கல்லூரி முதல்வர்கள் |
| 2.3 | **முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்**<br><br>முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும் மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. | ➢ இத்திட்டத்தின் மூலம் பயனடைய வருமான வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.<br><br>➢ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவிகள் மட்டும். | கல்லூரி முதல்வர்கள் |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 2.4 | **சிறப்புக் கட்டணச் சலுகை**<br>பொதுப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்க்கான சிறப்புக் கட்டணத்தை கல்வித் துறை திரும்ப வழங்குகிறது.<br>தமது பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்க்கான சிறப்புக் கட்டணத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை வழங்குகிறது. | ➢ அனைத்து ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர்.<br>➢ வருமான வரும்பு இல்லை. | ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை–5. |
| 2.5 | **தேர்வுக் கட்டணம் / விண்ணப்பக் கட்டணம் / பதிவுக் கட்டணச் சலுகைகள்**<br>10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர் அனைவருக்கும் தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.<br>மேலும் அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவ / மாணவியர்க்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. | அனைத்து ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர். | ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை–5. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| **3. மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் இலவச உதவித் திட்டங்கள்** | | | |
| 3.1 | **பாடப்புத்தகங்கள்**<br><br>ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் ஒன்று முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/ மாணவியர்க்கும். | அனைத்து ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர் | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர். |
| 3.2 | **குறிப்பேடுகள்**<br><br>(i) 3ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை ஆதி திராவிடர் நலப் பள்ளி / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியர்க்கும்.<br><br>(ii) 4ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்க்கும். | ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர் | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 3.3 | **சீருடை**<br>ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் ஒன்று முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/ மாணவியர்களுக்கும் நான்கு ஜோடி விலையில்லா சீருடைகள் வழங்கப்படும். (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர் உட்பட). | ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர்கள் | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர் / விடுதி காப்பாளர் / காப்பாளினி. |
| 3.4 | **மிதிவண்டி**<br>அரசு /அரசு உதவி பெறும் மற்றும் அரசு உதவி பகுதியாகபெறும் (சுயநிதி) பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர் பயன்பெறும் வகையில், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. | ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர்கள் | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 3.5 | **திறன் மிக்க பள்ளிகளில் 11ம் வகுப்பில் மாணவ / மாணவியரைச் சேர்த்தல்.**<br>மாநகராட்சி / நகராட்சி / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகளில் பயின்று 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களில், மாவட்டத்திற்கு 10 மாணவர்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு ஆக மொத்தம் 320 மாணவ / மாணவியர் நற்பெயர் பெற்றுள்ள தனியார் பள்ளிகளில் +1 சேர்க்கப்பட்டு அவர்களுக்கு தரமான கல்வி வழங்கப்படுகிறது. | ➢ பெற்றோர்/ பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/– .<br>➢ ஒரு ஆண்டுக்கு தங்கும் செலவு உட்பட ரூ.28,000/– ஒரு மாணவருக்கு வழங்கப்படும். | மாவட்ட ஆட்சித் தலைவர்கள். |
| 3.6 | **திறன் மிக்க பள்ளிகளில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ / மாணவியரை 6ம் வகுப்பில் சேர்த்தல்.**<br>அரசு / அரசு உதவி பெறும் / ஆதி திராவிட | ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| | நலப் பள்ளிகளில் 5ஆம் வகுப்புப் பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட சமூகத்தை சேர்ந்த சிறந்த மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு நற்பெயர் பெற்ற தரமான உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு 12ஆம் வகுப்பு வரை அங்கேயே பயில அனுமதிக்கப்படுகின்றனர். வட்டார அளவிலான போட்டித் தேர்வின் மூலம், ஒரு வட்டாரத்திற்கு ஒரு மாணவர்/மாணவி வீதம் தேர்வு செய்யப்படுகின்றனர். அவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் 385 மாணவ /மாணவியர் பயனடைகின்றனர். | | |
| 3.7 | **சிறப்பு வழிகாட்டி மற்றும் வினா வங்கி** | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி பயிலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ / மாணவியருக்கு மட்டும். | சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் / விடுதி காப்பாளர் |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| **4. ஊக்கத்தொகைபெண்கல்வி ஊக்குவிப்பு சிறப்பு திட்டம்** | | | |
| 4.1 | **பெண்கல்வி ஊக்குவிப்பு சிறப்பு திட்டம்**<br>➢ மாநிலம் முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளில் 3ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பெண் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500 ம்<br>➢ ஆறாம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பெண் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000மும் வழங்கப்படுகிறது.<br>➢ இத்தொகை அவர்களுடைய அஞ்சலக சேமிப்புக் கணக்கில் செலுத்தப்படும் | ➢ ஆதிதிராவிடர் / பழங்குடியின பெண் குழந்தைகள் மட்டும்.<br>➢ வருமான வரம்பு இல்லை. | தலைமை ஆசிரியர்கள் மூலமாக மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| **5. பரிசுத் தொகைத் திட்டம்** | | | |
| 5.1 | **முதலமைச்சர் தகுதி பரிசுத் தொகைத் திட்டம்**<br>12ம் வகுப்பு தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் 1000 மாணவர்கள் மற்றும் 1000 மாணவியர்கள் தொடர்ந்து பயின்றால் 5 ஆண்டுகள் வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ.3000/– வீதம் வழங்கப்படும். | ➢ அனைத்து ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர்கள்.<br>➢ வருமான வரம்பு இல்லை. | மேற்படிப்பு பயிலும் மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 5.2 | **காந்தி நினைவு பரிசு** பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண்கள் பெறும் இந்து ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு அண்ணல் காந்தியடிகளின் நினைவாக இப்பரிசுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த பரிசுத்தொகை முதல் வருடத்திற்கு ரூ.2000மும், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1500 வீதமும் வழங்கப்படுகிறது. | ➢ இந்து ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவ/மாண வியருக்கு மட்டும்.<br>➢ 12ம் வகுப்பில் மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்று படிப்பைத் தொடர வேண்டும். | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.<br><br>கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |
| 5.3 | **சிறப்பு பரிசுத் தொகை திட்டம்** பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்பு, தொழில் நுட்பப் படிப்புகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெறும் 550 ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர்க்கு சிறப்புப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. | பட்டபடிப்பு மாணவர்களுக்கு ரூ.2000/–<br><br>பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு ரூ.4000/–<br><br>தொழிற்கல்வி மாணவர்களுக்கு ரூ.5000/– | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.<br><br>கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 5.4 | **தகுதி வழிவகைப் பரிசுத்தொகை** ஒவ்வொரு மாவட்டத்திலும் +2 வில் முதல் மதிப்பெண்கள் பெறும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், பழங்குடியின மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இவ்வகைப் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. இந்த பரிசுத்தொகை முதல் வருடத்திற்கு ரூ.2000ம், அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1500மும் வழங்கப்படுகிறது. | ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர்கள் | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.<br><br>கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |
| 5.5 | **சிறந்த மாணவர்களுக்கான ஊக்கத்தொகை திட்டம்.** ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மற்றும் 2ஆம் மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்திலும் 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியருக்கு முதல் ஆண்டுக்கு ரூ.800/– அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு ரூ.960/–ம் வழங்கப்படுகிறது. | ➢ 10ம் வகுப்பில் மாவட்டத்தில் முதல் மற்றும் 2ம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். படிப்பைத் தொடர்ந்து படிக்க வேண்டும்.<br>➢ வருமான வரம்பு இல்லை. | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. கல்வி நிலையத் தலைவர்கள் மூலமாக. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| **5.6** | **டாக்டர் அம்பேத்கர் தேசிய தகுதி கல்வி உதவித் தொகை.**<br>10ம் வகுப்பில் மாநில அளவில் முதல் 3 மதிப்பெண் பெறும் மாணவர்கள்<br>முதல் பரிசு – ரூ.60,000/–<br>2ம் பரிசு – ரூ.50,000/–<br>3ம் பரிசு – ரூ.40,000/– | ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் குடும்ப வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு குறைவாக. | இயக்குநர். நியூடெல்லி அம்பேத்கர் பவுண்டேஷனின் தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் மூலமாக. |
| | 12ம் வகுப்பில் மாநில அளவில் முதல் 3 மதிப்பெண் பெறும் மாணவர்கள் அறிவியல், கலை மற்றும் வணிகவியல்<br>முதல் பரிசு – ரூ.60,000/–<br>2ம் பரிசு – ரூ.50,000/–<br>3ம் பரிசு – ரூ.40,000/– | ஆதிதிராவிடர் குடும்ப வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல். | இயக்குநர், நியூடெல்லி அம்பேத்கர் பவுண்டேஷன் தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி வாரியம் மூலமாக. |
| **6. மாநில அளவிலான பரிசுத் தொகை (12 ஆம் வகுப்பு)** | | | |
| **6.1** | 12ம் வகுப்பு தேர்ச்சி பெறும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்திலும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி.<br><br>முதலிடம் ரூ.50,000/–<br>2ம் இடம் ரூ.30,000/–<br>3ம் இடம் ரூ.20,000/– | மாநில அளவில் முதல் 3 இடங்கள் பெறும் மாணவர்கள் மற்றும் மாணவிகள். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக/ ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| **6.2** | **12ம் வகுப்பில் மாநில அளவில் பாடங்களில் முதன்மை (25 பாடங்கள்)**<br><br>மாநில அளவில் பாட முதன்மை பெறுபவருக்கு ரூ.2000/– வீதம். | மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |
| **7. மாநில அளவிலான பரிசுத் தொகை (10ஆம் வகுப்பு)** | | | |
| **7.1** | 10ம் வகுப்பு தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி<br><br>முதலிடம் ரூ.25,000/–<br>2ம் இடம் ரூ.20,000/–<br>3ம் இடம் ரூ.15,000/– | மாநில அளவில் 10ம் வகுப்பில் முதல் 3 இடங்கள் பெறும் மாணவ / மாணவியர் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை,<br>சென்னை–5. |
| **7.2** | **10ம் வகுப்பில் மாநில அளவில் பாடங்களில் முதன்மை (5 பாடங்கள்)**<br>மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய | மாநில அளவில் 10ம் வகுப்பில் பாட முதன்மை | மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை,<br>சென்னை–5. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| | ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு ரூ.1,000/– வீதம் பரிசுத் தொகை | | |
| **8. மாவட்ட அளவிலான பரிசுத் தொகை (10 &12ம் வகுப்பு)** | | | |
| 8.1 | 12ம் வகுப்பு<br>ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய மூன்று பிரிவினரில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு ரூ.6000/– வீதம் பரிசுத்தொகை | 12ம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |
| **10 ஆம் வகுப்பு (மூன்று பரிசுகள்)** | | | |
| 8.2 | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய மூன்று பிரிவினரில் மாவட்ட அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெறுபவர்கள்.<br><br>முதலிடம் ரூ.2,000/–<br>2ம் இடம் ரூ.1,000/–<br>3ம் இடம் ரூ.500/– | மாவட்ட அளவில் 10ம் வகுப்பில் முதல் 3 இடங்கள் பெறும் மாணவ / மாணவியர் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|

## 9.வேலைவாய்ப்புக்கான சிறப்பு பயிற்சி.

| | | | |
|---|---|---|---|
| 9.1 | **இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி – ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.ஆர்.எஸ்., போன்ற படிப்புகளுக்கு பயிற்சி அளித்தல்.**<br><br>இந்திய குடிமைப்பணி (Civil Services) தேர்வு எழுத முன்னோடி பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி அளித்தல்.<br><br>மாணவர்களது பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சம்.<br><br>பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மேல் உள்ளவர்கள் உணவு கட்டணமாக மாதம் ரூ.1200/– செலுத்த வேண்டும். | பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். முதல் நிலை தேர்வுக்கான மாணவர்கள் நுழைவுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவர். தங்கும் இடமும் உணவும் இலவசமாக வழங்கப்படும். | இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை–28. |
| 9.2 | **தட்டச்சு / சுருக்கெழுத்து பயிற்சி.**<br><br>ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி அளித்தல். | வருமான வரம்பு இல்லை. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| **10. வழக்கறிஞர்கள் தொழில் தொடங்க உதவி** | | | |
| 10.1 | **வழக்கறிஞர்கள் தொழில் தொடங்க மானியம்**<br><br>கட்டிட வாடகை புத்தகங்கள், மரச் சாமான்கள் வாங்க சிறப்பு மானியம் அளிக்கப்படுகிறது.<br><br>வழக்கறிஞர் பட்டம் பெற்ற ஆதிதிராவிட / பழங்குடியின சட்டப் பட்டதாரி ஒருவருக்கு ரூ.10,000/– வீதம் வழங்கப்படும். | பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/–.<br><br>சட்டப் படிப்பினை முடித்து வழக்கறிஞராக பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குள் விண்ணப்பித் திருக்க வேண்டும். | ஆணையர் ஆதி திராவிடர் நலம், சென்னை – 5. |
| **11. தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவி.** | | | |
| 11.1 | **தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்**<br><br>தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு தச்சுக் கருவி / தையல் இயந்திரம் மற்றும் தொழில் செய்ய ஆர்வமுள்ளவர்களுக் குத் தேய்ப்பு பெட்டி வழங்குதல். | சாதிச் சான்றிதழ், ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.40,000/–மும், நகர்ப் புறங்களில் ரூ.60,000/– மாகவும் இருக்க வேண்டும். தொழிற் கல்வி படித்ததற்கான சான்றிதழ். | தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| **12. சிறந்த எழுத்தாளர்களுக்கான நிதி உதவி.** | | | |
| 12.1 | **சிறந்த எழுத்தாளர்களுக்கு ரூ.20,000/– நிதி உதவி வழங்குதல்.**<br><br>ஆதிதிராவிடர் / பழங்குடியினர் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் சிறந்த எழுத்தாற்றல் மிக்க 10 படைப்பாளிகளுக்கு நிதி உதவி வழங்குதல்.<br><br>இவர்களை தவிர ஆதிதிராவிடர் அல்லாத ஒருவருக்கும் இந்த வாய்ப்பு அளிக்கப்படும்.<br><br>ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்/ மே மாதங்களில் செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடப்படும்.<br><br>ஒவ்வொரு சிறந்த நூலுக்கும் ரூ.20,000/– நிதி உதவி வழங்கப்படும். | சிறந்த படைப்பாக இருத்தல் வேண்டும் | ஆணையர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|

## 13. விடுதிகள் – விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கான சலுகைகள்.

| | | | |
|---|---|---|---|
| 13.1 | **12ம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவச உணவு உறைவிடம்**<br>பள்ளிக்கும் வீட்டிற்கும் உள்ள தூரம் 5 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். (இது மாணவியருக்கு பொருந்தாது) | ➢ ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கு<br>➢ ஆண்டு வருமானம் ரூ.1,00,000/– | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |
| 13.2 | **சீருடை**<br>12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர் அனைவருக்கும் | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |
| 13.3 | **சிறப்பு வழிகாட்டி**<br>10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் அனைவருக்கும். | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |
| 13.4 | **பாய் மற்றும் போர்வை.**<br>விடுதிகளில் தங்கி பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் (இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை). | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 13.5 | **இதர செலவினம்**<br><br>சோப்பு, எண்ணெய் போன்ற பல்வகைச் செலவினத்திற்கு கல்லூரி விடுதி மாணவர்களுக்கு ரூ.75ம் பள்ளி விடுதி மாணவர்களுக்கு ரூ.50ம் வழங்கப்படுகிறது. | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு | விடுதி காப்பாளர்/ காப்பாளினி. |
| **14.** | **தீண்டாமை ஒழிப்பு** | | |
| 14.1 | **தீண்டாமை ஒழிப்பு**<br><br>குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்– 1955ன் மூலம் சமூக நீதி அனைவருக்கும் சமமாக கிடைப்பதை உறுதி செய்தல். | வன்கொடுமையால் உயிரிழந்த ஒவ்வொருவரது குடும்பத்திற்கும் அதிக பட்சமாக ரூ.5 இலட்சம் இழப்பீடாக வழங்கப்படும். குடும்ப சூழ்நிலையின் அடிப்படையில் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை, தேவைப்படின் வீடும், விவசாய நிலமும் வழங்கப்படும். (GOI, MoSJ&E) கடிதம் எண்.DO 11012/2/2008,PCR (Desk) நாள்.20.01.2012. | மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 14.2 | **கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு உதவி.**<br><br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம்–1989 விதிகள் 1995 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளில் இருந்து பாதுகாத்தல். | கலவரங்களால் பாதிக்கப்பட்டு உயிரை இழக்கும் நபரது குடும்பத்திற்கு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் தீருதவியாக வழங்கப்படுகிறது. மேலும் உயிரிழந்த நபரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி அல்லது அக்குடும்பத்திற்கு ஒரு வீடும், விவசாய நிலமும் வழங்கப்படுகின்றன. (GOI, MoSJ&E கடிதம் எண்.DO 11012/2/2008,PCR (Desk) நாள் 20.01.2012. | மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| 14.3 | **மத நல்லிணக் கத்துடன் வாழும் கிராமங்களை தேர்வு செய்து பரிசு வழங்குதல்.**<br>மாவட்டம் தோறும் (சென்னை நீங்கலாக) மத நல்லிணக்கத்துடன் வாழும் கிராமம் ஒன்றினை தேர்வு செய்து ரூ.2 இலட்சம் பரிசு வழங்குதல் | மதநல்லிணக்கத் துடன் வாழும் கிராமம் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|

## ஆதிதிராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

## 15. பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்.

| | | | |
|---|---|---|---|
| 15.1 | **மகளிர் சுய உதவி குழுக்களுக்கான சுழல் நிதி**<br><br>மகளிர் சுய உதவிக்குழு, இந்து ஆதிதிராவிடர் இன மகளிர் 12 முதல் 20 உறுப்பினர்கள் கொண்டது. மகளிர் சுய உதவிக் குழு தொடங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு பிறகு தரம் பிரித்தல் செய்யப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றிருப்பின் வங்கியில் சுழல் நிதி பெறுவதற்காக தாட்கோ மானியம் ரூபாய் 10,000/– வங்கிக்கு விடுவிக்கப்படும். | ➢ ஆதிதிராவிடர் மகளிர் மட்டுமே உள்ள குழுவாக இருக்க வேண்டும்.<br>➢ அனைத்து உறுப்பினர்களுக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ சுழல் நிதி பெறுவதற்கு குழு தரம் பிரிக்கப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>➢ பொருளாதார கடன் பெறுவதற்கு சுழல் நிதி பெற்று இரண்டாவது முறையாக தரம் பிரித்தல் செய்யப்பட்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>➢ சுய உதவிக் குழு வேறு எந்த அரசு திட்டத்திலும், சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுக்காக | மாவட்ட மேலாளர், தாட்கோ. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| | | மானியம் பெற்றிருக்கக் கூடாது. | |
| 15.2 | **மகளிர் சுய உதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி திட்டம்** திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகப் பட்சமாக 50% அல்லது ரூ.2.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும். | ஆதி திராவிடர் மகளிர் உள்ள குழுக்கள் | மாவட்ட மேலாளர் தாட்கோ |
| 15.3 | **நிலம் வாங்குதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்** திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு | ➢ ஆதிதிராவிட இனத்தை சேர்ந்த மகளிராக இருக்க வேண்டும்.<br>➢ ஒவ்வொரு பயனாளியும் 2.5 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்க தகுதியுடையவர் கள் | மாவட்ட மேலாளர், தாட்கோ. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| | விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும். இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் 100% விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. | ➢ வயது 18க்கு மேலும் 55 வயதிற்குள்ளாக வும், இருக்க வேண்டும்.<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ நிலமற்றவராக இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | |
| 15.4 | **நலநிதி திட்டம்**<br><br>தாட்கோ திட்டங்கள் எதிலும் உடனடியாக பயன்பெற இயலாதவர்களுக்கு விரைவில் சுய | ➢ ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும்.<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு (ஒரு இலட்சம் | மாவட்ட ஆட்சியர் / மாவட்ட மேலாளர் தாட்கோ. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| | தொழில் புரிந்து பயன்பெறும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.<br><br>வருவாய் ஈட்டும் வகையில் 100% மானியமாக ஒரு நபருக்கு அதிக பட்சமாக ரூ.10,000/– வழங்கப்படும் | மட்டும்) மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ எந்த ஒரு அரசு திட்டத்தின் கீழும் மாதாந்திர அடிப்படையில் தொடர்ந்து பணப்பயன் பெறாதவர்களாக இருக்க வேண்டும்<br>1. ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியாக இருக்க வேண்டும்.<br>2. ஆதரவற்ற விதவைகள்<br>3. வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட நபர்கள்<br>4. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஆகிய நால்வருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் | |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 15.5 | **தொழில் முனைவோர் திட்டம்**<br><br>ஆதிதிராவிடர்கள் தங்களுக்கு தெரிந்த, விருப்பமான, முன் அனுபவம் உள்ள தொழில் புரிந்து வருவாய் ஈட்டி பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேறும் பொருட்டு தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.<br><br>திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும். | ➢ குடும்ப ஆண்டு வருமானம் 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ வயது 18–க்கு மேலும் 55 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>➢ கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | மாவட்ட மேலாளர், தாட்கோ. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 15.6 | **இந்திய குடிமைப்பணி முதன்மை தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி**<br><br>இந்திய குடிமைப்பணி முதன்மை தேர்வுகளை எழுத விரும்பும் ஆதிதிராவிடர் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதல் நிலைத் (Preliminary Exam) தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மை தேர்வு (Main Exam) எழுதுபவர்களுக்கு ரூ.25,000/– நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிதி உதவி ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் மூன்று முறை வழங்கப்படும் | ➢ தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–ற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ இந்திய குடிமைப்பணி முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>➢ இந்திய குடிமைப்பணி முதன்மை தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்.<br>➢ மாநில அரசு / மத்திய அரசு / பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும்.<br>➢ இத்திட்டத்தின் கீழ் மூன்று முறை பயன் பெறாத வராக இருக்க வேண்டும். | மேலாண்மை இயக்குநர் தாட்கோ தலைமையகம் சென்னை. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 15.7 | **இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEPY)**<br><br>படித்த வேலையற்ற அல்லது குறைவான சம்பளத்தில் வேலை செய்யும் ஆதிதிராவிடர் இளைஞர்கள் தங்களுக்கு தெரிந்த விருப்பமான தொழிலில் மானியம் மற்றும் கடன் உதவி பெற்று வருவாய் ஈட்டி பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடையும் பொருட்டு இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. | ➢ குடும்ப ஆண்டு வருமானம் 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ வயது 18–க்கு மேலும் 35 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>➢ கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலை பற்றி அறிந்தவராகவோ அனுபவம் உள்ளவராகவோ இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.<br>➢ தாட்கோ, மாநில அல்லது மத்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களில் தகுதி சான்று பெற்றிருக்க வேண்டும். | மாவட்ட மேலாளர், தாட்கோ. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 15.8 | **துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம்**<br><br>தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்புகளை விரைந்து வழங்கும் திட்டத்தின் கீழ் (Fast Track Power Supply) விவசாயிகளிடம் ரூ.10,000/— வைப்புத் தொகை பெற்றுக் கொண்டு விரைவில் மின் இணைப்பு வழங்கி வருகிறது. ஆதிதிராவிடர் விவசாயிகளில் அதிகமான நபர்கள் ரூ.10,000/— செலுத்த இயலாத நிலையில் உள்ளதால் துரித மின் இணைப்பு பெறும் வகையில் நபர் ஒன்றுக்கு ரூ.10,000/— வைப்புத் தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் நேரடியாக தாட்கோ செலுத்தி துரித மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | ➢ நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலம் பட்டா இருக்க வேண்டும்.<br>➢ மேற்கண்ட நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்க வேண்டும். | |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| **16. தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்.** | | | |
| **16.1** | **தமிழ்நாடு தூய்மைப் பணி புரிவோர் நல வாரியம்.**<br><br>தூய்மைப்பணி புரிவோரது பொருளாதாரம் மற்றும் கல்வியையும் மேம்படுத்துதல். | அனைத்து இனத்தவரும் தமிழ்நாடு தூய்மை பணிபுரிவோர் நல வாரியத்தில் உறுப்பினராகலாம், தூய்மைப் பணி புரிவோராக இருத்தல் வேண்டும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 101 / மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| **17. வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள்** | | | |
| **17.1** | **இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம்**<br>இலவசமாக வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. கிராமப்புறத்தில் 3 சென்டும், நகராட்சி பகுதியில் 1½ சென்டும், மாநகராட்சி பகுதியில் 1 சென்டும் வழங்கப்படுகிறது | ➢ வீட்டுமனை சொந்தமாக இருக்கக் கூடாது.<br>➢ ஆண்டு வருமான வரம்பு கிராம பகுதியில் ரூ.40,000/– நகரப் பகுதி களில் ரூ.60,000/–<br>➢ ஆதிதிராவிடர் / பழங்குடியினராக இருக்க வேண்டும்<br>➢ | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அல்லது தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) |
| **17.2** | **வீடுகள் கட்டித்தரும் திட்டம்**<br>‘‘இந்திரா நினைவு குடியிருப்பு’’ திட்டத்தின் கீழ் பழங்குடியினருக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரப் படுகின்றன. | ➢ வீடு இல்லாதவர் களுக்கு மட்டும்<br>➢ மனைப்பட்டா வைத்து இருக்க வேண்டும்<br>➢ பழங்குடியினரு க்கு மட்டும் | சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தலைவர்/ ஊராட்சி ஒன்றிய ஆணையர் / திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 17.3 | **குடிநீர் வசதி**<br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் இடங்களில் குடிநீர் வசதி இல்லாத குடியிருப்பு களுக்கு குடிநீர் வசதிகள் செய்து தருதல் | ➢ குடிநீர் வசதி இல்லாமை | 1) கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்<br>2) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்<br>3) ஊராட்சி ஒன்றிய ஆணையர் |
| 17.4 | **மயானம்**<br><br>மயானம் மற்றும் மயானத்திற்கு செல்லும் பாதை வசதிகள் செய்து தருதல். | ➢ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்பு களுக்கு மயானம் இல்லாமை<br><br>➢ மயானம் இருந்தால் அதற்கு பொது பாதை வசதி இல்லாதது | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் மாவட்டஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| 17.5 | **இணைப்புச் சாலை**<br><br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளை இணைக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்து தருதல் | ➢ குடியிருப்பு களுக்குச் செல்ல இணைப்புச் சாலை இல்லாமை | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும பழங்குடியினர் நல அலுவலர் |
| 17.6 | **சமுதாய நலக்கூடங்கள்**<br><br>ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகளில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த சமுதாய நலக்கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன | ➢ சமுதாய நலக்கூடங்கள் இல்லாத ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகள் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ. |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 17.7 | **ஈமச்சடங்குக்கு உதவி**<br><br>ஏழ்மை நிலையில் உள்ள ஆதிதிராவிடர் / பழங் குடியினர் குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் அந்த ஈமச்சடங்கிற்கு ரூ.2500/– மானியமாக அளிக்கப் படுகின்றது | ➢ இறந்தவர் களின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.24000க்குள் இருக்க வேண்டும். | ஆணையர், ஊராட்சி ஒன்றியம்/செயல் அலுவலர், பேரூராட்சி ஆணையர், நகராட்சி / மாநகராட்சி/மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| **18. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்** | | | |
| 18.1 | **புதிரை வண்ணார் நல வாரியம்**<br><br>ஆதி திராவிடர் இனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான புதிரை வண்ணாரின மக்களது பொருளாதாரம் கல்வியை மேம்படுத்துதல் | ➢ புதிரை வண்ணார் சாதியினர்<br>➢ சலவைத் தொழில் செய்ய வேண்டும்.<br>➢ 18 வயது முதல் 60 வயது உடையவராக இருத்தல் வேண்டும். | சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| **19. கொத்தடிமை ஒழிப்புத்திட்டம்** | | | |
| **19.1** | **கொத்தடிமை ஒழிப்பு** கொத்தடிமையாக இருந்து மீட்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ.1000/– உடனடி நிவாரணத் தொகையாகவும், பின்னர் அவர்களது சுய தொழில் தொடங்க ரூ.19,000/– மறுவாழ்வு நிவாரண நிதியாகவும் 01.04.2000 முதல் வழங்கப்பட்டு | ➢ சாதி, மத பேதமில்லை<br>➢ விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் அனைவரும் | மாவட்ட ஆட்சியர் / சார் ஆட்சியர் / கோட்டாட்சியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| | வருகிறது. இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் 50:50 பங்குத் தொகையில் செயல்படுத்தப்படுகின்றன. கொத்தடிமைமுறை ஒழிப்புத் திட்டம். கொத்தடிமையாக உள்ள எல்லா இனத்தவரும், தமிழகத்திலும், இதர மாநிலத்திலும் கொத்தடிமையாக இருந்து மீட்கப்பட்டவர்கள். | | |

| 20. பழங்குடியினர் நலத்துறை திட்டங்கள் | | | |
|---|---|---|---|
| 1 | **தோட்டக்கலை மேம்பாடு** ரூ.1000 பெறுமானமுள்ள மரக்கன்றுகள், விதைகள், உரம் இலவசமாக வழங்கப் படுகின்றன | பழங்குடியினர் ஒரு ஏக்கர் நிலம் உள்ளவர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர் தோட்டக்கலைத்துறை |
| 2 | **பட்டுப்பூச்சி வளர்ப்புத்திட்டம்** மல்பரி தோட்டம் ஏற்படுத்தவும் பட்டுப்புழு வளர்க்கவும் முழு மான்யம் அளிக்கப் படுகிறது. | பழங்குடியினர் 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர் பட்டுவளர்ச்சித்துறை |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 3 | **சிறிய நீர்ப்பாசனத் திட்டம்** பழங்குடியினர் அதிகம் நிலம் வைத்திருக்கும் பகுதிகளில் சிறிய நீர்த்தேக்க அணை போன்றவை ஏற்படுத்தப்படுகின்றன. | பயன்பெறுவோரில் 50% மேல் பழங்குடியினராக இருக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு, பொதுப் பணித்துறை. |
| 4 | **கால்நடை பராமரிப்பு** ஆடுகள், கறவை மாடுகள், கன்றுகள் வாங்கி வளர்க்க முழு மானியம் வழங்கப்படும். கால்நடை களுக்கு மருத்துவ வசதி, கருவுருத்தல் போன்றவைகளும் செய்யப்படுகின்றது. | பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை மருத்துவர் மற்றும் கால்நடை ஆய்வாளர் |
| 5 | **விவசாய நில மேம்பாடு** மலைச்சரிவில் உள்ள நிலத்தை மழை நீர் அடித்துச் செல்லாமல் தடுத்து விவசாயம் செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தல் இவை முழுவதும் இலவசமாக செய்து தரப்படுகின்றது. | நிலமுடைய பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை. |
| 6 | **தேனி வளர்ப்பு** தேன் சேகரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க 10 தேன் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. | மலை, காடு பகுதிகளில் வாழும் பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராம கைத்தொழில் வாரியம் |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 7 | **வனவளப் பாதுகாப்பு** வனவளத்தை அதிகரிக்க செடிகள் வழங்குதல், அந்த செடிகளைப் பராமரிக்க ஊக்கத்தொகை வழங்குதல் | வனப்பகுதியில் வாழும் பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட வனத்துறை அலுவலர் |
| 8 | **பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள்** பழங்குடியினருக்கு வட்டியில்லாக்கடன் வழங்க, அவர்கள் விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்க, அரிசி, உப்பு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருள்களை நியாய விலையில் வழங்க, விவசாயத்திற்குத் தேவையான இடு பொருட்களை நியாய விலையில் விநியோகம் செய்ய, பொருளாதாரத் திட்டங்களுக்கு கடன் போன்றவை பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் (LAMP) மூலம் வழங்குதல். | பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட வனத்துறை அலுவலர்/ தனி அலுவலர், சம்பந்தப்பட்ட பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் |
| 9 | **தெருவிளக்கு அமைத்தல்** பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு தெருவிளக்கு அமைத்தல் | தெருவிளக்கு இல்லாத குடியிருப்பு | கண்காணிப்பு பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம்/ ஆணையர், ஊராட்சி ஒன்றியம். |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 10 | **இணைப்புச் சாலைகள் அமைத்தல்**<br><br>பழங்குடியினர் குடியிருப்புகளை முக்கிய கிராமத்துடன் அல்லது சமவெளியுடன் இணைத்தல் | தற்பொழுது சாலை வசதி இல்லாத கிராமம் | ஆணையர், ஊராட்சி ஒன்றியம் / கண்காணிப்பு பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைத்துறை / மாவட்ட ஆட்சியர். |
| 11 | **இலவசமாக வீடுகள் கட்டித்தருதல்**<br><br>மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டித்தருதல் | வீட்டுமனை உள்ள பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / ஊராட்சி ஒன்றிய ஆணையர் / பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் |
| 12 | **வேலைவாய்ப்பு ஆலோசனைகள்**<br><br>பழங்குடியின இளைஞர் களுக்கு வேலைவாய்ப்புக் குரிய உதவிகள், ஆலோசனைகள் நல்க ஒரு தொழில் நெறி வழிகாட்டும் மையம் உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது. | பழங்குடியின இளைஞர்கள் | தனிவேலை வாய்ப்புக்கான ஆலோசனை மையத்தி லுள்ள வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர், உதகமண்டலம். |
| 13 | **வேலைவாய்ப்பு பயிற்சி அளித்தல்**<br><br>போதிய கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி அளித்தல். | பழங்குடியின கல்வி பயின்ற இளைஞர்கள் | பயிற்சிக்கான வழிகாட்டிக்கு தொடர்புடைய மாவட்ட வேலை வாய்ப்பு மையங்கள் |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| 14 | **பெண்கள் முன்னேற்றத்திற்கு பயிற்சி அளித்தல்** பழங்குடியின பெண்கள் முன்னேற்றத்திற்காக தையல் பயிற்சி, மூங்கில் கூடைமுடைதல் போன்ற பயிற்சி அளித்தல். | பழங்குடியின பெண்கள் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர். |
| 15 | **மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம்** நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டித்தருதல், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, உண்டி உறைவிடப் பள்ளிக்கு குடிநீர் வசதி, கூடுதல் கட்டட வசதி, சமுதாயக்கூடம், கணினிகள், வாகன உரிமம், பாதை வசதி அளிப்பது முதலியவை | பழங்குடியினர்கள் | திட்ட அலுவலர் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், நீலகிரி மாவட்டம். |
| 16 | **மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்** ஆதி திராவிடர்/ பழங்குடியினர்கள் வசிக்கும் மாவட்டங்கள், சுற்றுச்சுவர் மற்றும் தடுப்புச்சுவர் வகுப்பறைகள், உண்டி உறைவிடப்பள்ளிகளுக்கு சமையல் கூடம், பாதை வசதி, குடிநீர்வசதி, தெரு விளக்குகள் முதலியன | ஆதி திராவிடர்/ பழங்குடியினர்கள் | மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்<br>1. கன்னியாகுமரி<br>2. திருநெல்வேலி<br>3. விருதுநகர்<br>4. மதுரை<br>5.தேனி<br>6.திண்டுக்கல்<br>7. கோயம்புத்தூர்<br>8. திருப்பூர்<br>**9.** ஈரோடு மாவட்டங்கள் |

| | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள். |
|---|---|---|---|
| **21. தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்** | | | |
| | **தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்**<br>பழங்குடியின ஒட்டு மொத்த சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. | பழங்குடியினர் நல வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| **22. தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரிய திட்ட உதவிகள்** | | | |
| | **தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்**<br><br>தூய்மைப்பணிபுரிவோரின் சமூக பொருளாதார கல்வி மேம்பாட்டிற்காக தமிழக அரசு தூய்மைப்பணி புரிவோர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. | தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் | சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர், தாட்கோ. |

## அனைத்து வாரியங்களின் கீழ் அளிக்கப்படும் உதவிகளின் விபரம்:

| வ. எண் | திட்ட உதவிகள் | | உதவித்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | **விபத்துக்காப்பீட்டுத்திட்டம்** | | |
| | (அ) விபத்து இறப்பு | | 1,00,000/- |
| | (ஆ) விபத்து ஊனம் | | 10,000/-முதல் 1,00,000 வரை |
| 2 | இயற்கையாக மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு உதவி | | 15,000/– |
| 3 | ஈமச்சடங்கு உதவி | | 2,000/– |
| 4 | **கல்வி உதவித்தொகை** | | |
| | அ | 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ | 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |
| | இ | 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/- |
| | ஈ | 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,500/- |
| | உ | 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | ஊ | முறையான பட்டபடிப்பு | 1,500/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 1,750/- ஆண்டுக்கு |
| | எ | முறையான பட்டமேற்படிப்பு | 2,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 3,000/- ஆண்டுக்கு |
| | ஏ | தொழில் நுட்பப்பட்டப்படிப்பு | 2,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/- ஆண்டுக்கு |
| | ஐ | தொழில் நுட்பப்பட்ட மேற்படிப்பு | 4,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 6,000/- ஆண்டுக்கு |
| | ஒ | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 1,200/- ஆண்டுக்கு |
| 5 | **திருமண உதவி** | | 2,000/- ஆண்டுக்கு |
| 6 | **மகப்பேறு உதவி** | | |
| | அ | மகப்பேறு உதவி மாதம் ரூ.1,000/– வீதம் | 6,000/- |
| | ஆ | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000/- |
| 7 | பழைய கண்கண்ணாடியை மாற்றுவதற்கும் / புதிய கண்கண்ணாடி வாங்கிட உதவி | | 500/–க்கு மிகாமல் |
| 8 | முதியோர் ஓய்வூதியம் | | 1000/– |